பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 05 2012 6 30 .

வியாழக்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்

- குடியரசுத் தலைவர் தேர்தலில் திரு பி ஏ சங்மா-வை வேட்பாளராக நிறுத்த அஇஅதிமுக, பிஜு ஜனதாதளம் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.
- தமிழகத்தில் மணல் கடத்தலில் ஈடுபடுவோரை மாநில அரசு இரும்புக்கரங்கொண்டு அடக்கும் என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரித்துள்ளார்.
- புதுக்கோட்டை சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது.
- ஏர் இண்டியா நிறுவன தொழிற்சங்கங்களுடன் அடுத்த வாரம் ஆலோசனை நடத்த இருப்பதாக விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு அஜித்சிங் கூறியிருக்கிறார்.

இனி விரிவான செய்திகள்

[]<><><><>[]

குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களவை முன்னாள் தலைவர் திரு பி ஏ சங்மா-வை வேட்பாளராக நிறுத்த அஇஅதிமுக ஆதரவு அளிக்கும் என தமிழக முதலமைச்சரும், அக்கட்சியின் பொதுச்செயலாளருமான செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், திரு பி ஏ சங்மா மற்றும் ஒடிஸா முதலமைச்சர் திரு நவின் பட்நாயக் ஆகியோருடனும், அஇஅதிமுக நிர்வாகிகளுடனும் தாம் மேற்கொண்ட ஆலோசனைகளை தொடர்ந்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கூறியுள்ளார்.

கடந்த 60 ஆண்டுகளில் பல்வேறு சமூகத்தினரும் குடியரசுத் தலைவர் பதவியை வகித்துள்ள நிலையில், பழங்குடி இனத்தைச் சேர்ந்த யாரும் இதுவரை இப்பதவி வகிக்காததால் திரு பி ஏ சங்மாவை அஇஅதிமுக ஆதரிப்பதாக செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே ஒடிஸா முதலமைச்சர் திரு நவின்பட்நாயக் தலைமையிலான பிஜு ஜனதாதளம் கட்சியும் திரு பி ஏ சங்மாகவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

[]<><><>[]

தமிழகத்தில் சட்டவிரோதமாக மணல் கடத்துவோர் யாராக இருந்தாலும் அவர்களை மாநில அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும் என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் குடிநீர் தேவைக்கும், விவசாயத்திற்கும் ஆதாரமாக விளங்கும், இயற்கையின் வரப்பிரசாதமான ஆற்றுப்படுகைகளை சமூகவிரோதிகள் தங்கள் சுய லாபத்துக்காக சேதப்படுத்துவதை தமது தலைமையிலான அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்றும் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திற்கு உட்பட்ட மதுராஜெயபுரம் கிராமத்தில் அனுமதியின்றி மணல் ஏற்றிய டிராக்டரை தடுத்து நிறுத்திய கிராம உதவியாளரை கொல்ல முயன்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒருவரையும், நீதிமன்றத்தில் சரணடைந்த டிராக்டர் உரிமையாளர் உள்ளிட்ட இருவரையும் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓராண்டில் மணல் கடத்தலில் ஈடுபட்ட ஐயாயிரத்து 33 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<><><>[]

வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்தது தொடர்பாக திமுக-வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு வீரபாண்டி ஆறுமுகம், மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான 16 இடங்களில் தமிழக லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

சேலம், சென்னை, தருமபுரி, உள்ளிட்ட இடங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு வீரபாண்டி ஆறுமுகம் கடந்த 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை தமிழக அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவரும், அவரது குடும்பத்தினரும் வருவாய்க்கு அதிகமாக இரண்டு கோடியே 88

லட்சம் ரூபாள் அளவுக்கு சொத்து சேர்த்துள்ளது தொடர்பாக சேலம் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை நேற்று வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

[]<><><><>[]

புதுக்கோட்டை சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது. வரும் 25-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும்

இத்தொகுதியில் அடுத்த மாதம் 12-ஆம் தேதி வாக்குபதிவும், 15-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையும் நடைபெறவுள்ளது.

[]<><><><>[]

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தேமுதிக வேட்பாளருக்கு மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சி ஆதரவு அளிக்கும் என்று அக்கட்சியின் மாநில செயலாளர் திரு ஜி ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஓராண்டுகால அஇஅதிமுக ஆட்சியின் பால்விலை, பேருந்து மற்றும் மின் கட்டண உயர்வுகள் பற்றியும், சட்டம் ஒழுங்கு நிலை குறித்தும் மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் பிரச்சாரம் மேற்கொள்ள இருப்பதாகவும் கூறியுள்ளார்.

[]<><><><>[]

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது மின் உற்பத்தி பிரிவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருவதாக பிரதமர் அலுவலக இணை அமைச்சர் திரு வி நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளித்த அவர், இதற்கான அணு உலைகளை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஏற்கனவே ரஷ்யாவுடன் கையெழுத்தாகியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பணிகளுக்கு ரஷ்ய அரசின் உதவிகள் தொடர்பான அம்சங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

[]<><><><>[]

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒப்பந்த தொழிலாளர்களில் சுமார் மூவாயிரம் பேர் நேற்று முதல் பணிக்கு வரத்தொடங்கி இருப்பதாக என் எல் சி நிறுவனத்தின் பொது மேலாளர் திரு எம் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்துள்ள அவர், பணி நிரந்தரம், சமவேலைக்கு சம ஊதியம் போன்ற கோரிக்கைகள் குறித்து தொழிலாளர்களை இரண்டு தொழிற்சங்கங்கள் தவறாக வழிநடத்தி செல்வதாகக் கூறியுள்ளார்.

பணபலன் தொடர்பாக 2015 ஆம் ஆண்டு வரை புதிய கோரிக்கைகளை எழுப்புவதில்லை என கடந்த 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை இந்த தொழிற்சங்கங்கள் மீறி இருப்பதாகவும் பொதுமேலாளர் குற்றம்சாட்டியுள்ளார்.

[]<><><><>[]

இதனிடையே நெய்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய ஏ ஐ டி யு சி தொழிற்சங்கத்தின் அகில இந்திய பொதுச்செயலாளர் திரு குருதாஸ் தாஸ் குப்தா, தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என்றார்.

இது குறித்து மத்திய நிலக்கரி மற்றும் மின்துறை அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு சென்றிருப்பதாக கூறிய அவர், விரைவில் சுமூக தீர்வு ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழக அரசு இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

[]<><><><>[]

ஏர் இண்டியா நிறுவன பிரச்சினைகளுக்கு தீர்வுகாண, அந்நிறுவனத்தைச் சார்ந்த அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் கூட்டத்தை அடுத்த வாரம் கூட்டியிருப்பதாக விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு அஜித்சிங் கூறியிருக்கிறார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத்தில் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் மனிதவள ஆதாரங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்றார்.

ஏர் இண்டியா – இண்டியன் ஏர்லைன்ஸ் இணைப்புக்கு பிந்தைய பணியாளர் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட அம்சங்களும் இந்த கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனிடையே ஏர் இண்டியா விமானிகள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தம் பத்தாவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

இந்நிலையில் விமானிகளின் வேலைநிறுத்தம் சட்டவிரோதமானது என தனி நீதிபதி அளித்த தீர்ப்பை எதிர்த்து விமானிகள் சங்கம் தாக்கல் செய்த மனுவை தில்லி உயர்நீதிமன்ற பெஞ்ச் தள்ளுபடி செய்துவிட்டது.

விமானிகளின் கோரிக்கை நீதிமன்ற அவமதிப்புக்கு உரியது என்பதால் இதனை அனுமதிக்க முடியாது என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

[]<><><><>[]

பிரான்ஸ், பெல்ஜியம் உள்ளிட்ட ஏழு நாடுகளுடன் இந்தியா சமூக பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாக வெளிநாடு இந்தியர் விவகார அமைச்சர் திரு வயலார் ரவி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளித்த அவர், ஹங்கேரி, செக்குடியரசு மற்றும் நார்வே நாடுகளுடனான ஒப்பந்தங்கள் படிப்படியாக செயல்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

ஜெர்மன் நாட்டுடன் சமூக காப்பீடு ஒப்பந்தம் ஒன்று ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு வயலார் ரவி தெரிவித்துள்ளார்.

[]<><><><>[]

ஷெடியூல்டு வகுப்பினர் மற்றும் ஷெடியூல்டு பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை திருத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு முகுல் வாஸ்னிக் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இதற்கான வரைவு மசோதா அனைத்து மாநிலங்களுக்கும் சுற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

ஷெடியூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் பாதுகாப்புக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகவும் திரு முகுல் வாஸ்னிக் கூறினார்.

[]<><><><>[]

ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த திரு எஸ் பன்னீர் செல்வம் காவல்துறை தலைமையக சட்டம் ஒழுங்கு பிரிவு உதவி ஐஜியாக மாற்றப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக திருமதி ஆர் பொன்னி, ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில உள்துறை செயலாளர் திரு ராஜகோபால் தெரிவித்துள்ளார்.

[]<><><>[]

கடந்த இரண்டு நாட்களாக கரூர் ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எய்ட்ஸ் நோய் குறித்த விளக்கக் கண்காட்சி ரயிலான ரெட் ரிப்பன் எக்ஸ்பிரஸ் அடுத்தகட்டமாக ராமநாதபுரம் செல்கிறது.

கரூரில் இக்கண்காட்சி இன்றுடன் நிறைவடைவதையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து எச் ஐ வி நோய் பற்றிய விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்த ரெட் ரிப்பன் எக்ஸ்பிரஸ் ரயில் கண்காட்சியை கன்னியாகுமரி திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் கரூர் ரயில் நிலையங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டிருப்பதாக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் திரு ஆர் சி மோகன்தாஸ் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

( வாய்ஸ்பைட் – மோகன்தாஸ் ) 42 செக

[]<><><>[]

மத்திய அரசின் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் படிப்பை இடையில் நிறுத்திய மூவாயிரத்து 770 மாணவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு கல்வியை தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அனைவருக்கும் கல்வி திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு ராமானுஜம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

( வாய்ஸ்பைட் – ராமானுஜம் )

இந்த திட்டம் தங்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக உள்ளது என மாணவ மாணவியர் தெரிவித்துள்ளனர்.

( வாய்ஸ்பைட் – சிறுமி )

[]<><><>[]

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் தரம்சாலாவில் நடைபெறும் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வெற்றிபெற 121 ரன் எடுக்க வேண்டும் என்ற இலக்கை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்ணயித்துள்ளது.

டாஸ் வென்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை முதலில் பேட் செய்யும்படி பணித்தது.

முதலில் ஆடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் ---7 --- விக்கெட் இழப்புக்கு 120 ரன் எடுத்தது.

தற்போது ஆடிவரும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சற்று முன்னவர் வரை --- 2 --- விக்கெட் இழப்புக்கு ---69 -- ரன் எடுத்தது.

**[]<><><><>[]**